தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006.

ந.க.எண். 011028 /ஐ1/2019, நாள். 24.06.2019

பொருள் - பொது மாறுதல் - தொடக்கக் கல்வி – சார்நிலைப்பணி – வட்டாரக் கல்வி அலுவலர்கள் - மாறுதல் கோரும் விண்ணப்பம் பூர்த்தி செய்து அனுப்புதல் – சார்ந்து.

2019-2020 ஆம் கல்வி ஆண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்துக்கொள்ளும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் இணைப்பில் உள்ள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து 2 பிரதிகளில் 28.06.2019 ஆம் தேதிக்குள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

தற்போது பணிபுரியும் ஒன்றியத்தில் 01.06.2019 நிலவரப்படி, 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கண்டிபாக பொது மாறுதல் கோரி விண்ணப்பிக்க வேண்டும். மேலும், தற்போது பணிபுரியும் ஒன்றியத்தில் 01.06.2019 நிலவரப்படி 3 ஆண்டுகளுக்கு குறைவாக பணிபுரியும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் பொது மாறுதல் காலந்தாய்வில் கலந்துக்கொள்ள தகுதியற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2019-2020ம் கல்வியாண்டில் ஓய்வுபெறும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மாறுதல் கோரி விண்ணப்பிக்கத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கோரும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியினை மட்டும் 01.07.2019 அன்று தொடக்கக் கல்வி இயக்ககத்தில் தனிநபர் மூலம் கண்டிபாக ஒப்படைக்க வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கான
மாறுதல் கோரும் விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம்

24/6/2019

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்,

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலமாக)

24/6/19

Scanned by CamScanner